**காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கான (காஆஅ) உறுப்பினர்கள் நியமனம்**

2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) (திருத்தப்பட்டவாறான) சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் (காஆஅ) உறுப்பினர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக;

- நிகழ்வு கண்டறிதல் அல்லது நுண்ணாய்வு,
- மனிதவுரிமைகள் சட்டம்,
- சர்வதேச மனிதாபிமான சட்டம்,
- மனிதாபிமான பதிலிறுப்பு

என்பவற்றின் முன்னனுபவம் கொண்டவர்களிடமிருந்தும்

- அல்லது, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்கு இயைபான ஏனைய தகைமைகளை உடையவர்களிடமிருந்தும்

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

www.parliament.lk எனும் பாராளுமன்ற இணையத்தளத்தில் காஆஅ விற்கான *உறுப்பினர்கள் நியமனம்* என்ற துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு, முறையாகப் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள் **2024 மே 27** ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும் அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாகக் 'காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கான உறுப்பினர்கள் நியமனம்' எனக் குறிப்பிடவும்;

**அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம்**
**அரசியலமைப்புப் பேரவை - அலுவலகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**

அரசியலமைப்புப் பேரவையின் கட்டளையின் பேரில் வெளியிடப்பட்டது.

**அரசியலமைப்புப்  பேரவையின் செயலாளர் நாயகம்**
**அரசியலமைப்புப்  பேரவை - அலுவலகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே**
**2024.05.05**